LIFE OF

# SRI MUTHUSWAMY DIKSHITAR

IN TAMIL & ENGLISH

By

Dr. V. RAGHAVAN, M.A., Ph. D.

*Published by*

THE TRIPLICANE CLUB

on the day of the centenary of Dikshitar

As. 2.

# ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர்.

---

चतुर्णां पुरुषार्थानां त्यागं यस्मात्करोत्यत. ।
त्यागराज इति ख्यातं सोमास्कन्दं भजाम्यहम् ॥

தஞ்சாவூரிலுள்ள பாடல் பெற்ற பெருமை சிவஸ்தலங்களில் ஒன்று தமிழில் திருவாரூர் என்றும், ஸம்ஸ்க்ருதத்தில் ஸ்ரீபுரம், கமலாபுரம் என்றும் வழங்கப்படும் க்ஷேத்திரம். மனுநீதிகண்ட சோழன் என்ற அரசன் பண்டைக்காலத்தில் ஆண்டு வந்தானாம், அவன் மகன் தன் தேரில் பசுங்கன்றொன்றை அரைத்துவிட்டதற்காக, அவ்வரசன் தன் மகனை அப்படியே தேரில் அரைத்து விட்டதாயும் திருவாரூர் ஸம்பந்தமான கதைகளை சிறுவர்கள்கூட பாடப்புத்தகங்களில் படித்திருப்பார்கள். முசுகுந்தன் என்ற சக்ரவர்த்தியினால் ஸ்தாபிக்கப்பட்ட த்யாகராஜன் என்ற நாமம் பூண்ட நடமூர்த்தி அங்கு கோயில் கொண்டிருக்கிறது. இந்த க்ஷேத்திரம். அதன்மேலுமாய் திருவாரூரும் நாயன்மார்களால் பெருமை மேன்மையாய் பாடப்பட்டிருக்கின்றன. ஸங்கீதமூர்த்தி த்யாகராஜரின் ஊர் திருவாரூர்; ஆரூரில் பிறந்தவனோ உபயத்துறவில் ஒருவனைக் கருதப்படுகிறான். பிற்காலங்களில் தஞ்சை நாயக்க அரசர்களும், மஹாராஷ்டிர மன்னர்களும் காலையிலுள்ள தியாகராஜனைப் போற்றினார்கள். திருவாரூரிலும், அதைச் சுற்றியுள்ள அக்ரஹாரங்களிலும் புகழ்பெற்ற வித்வான்கள் குடியேறி இருந்தார்கள். தஞ்சை ஸமஸ்தானத்தில் பெரிய பண்டிதர்களாயும் கவிகளாயும் விளங்கிய பலருக்கு த்யாகராஜனே குலதைவம். அஜபா நடனம், ஹம்ஸ நடனம் என்று போகத்தையும், த்யாகம் ஸாக்ஷாத்

காரத்தையும் ஸூசிப்பிக்கும்படியான ஆனந்த நடனம் செய்யும் மூர்த்தி த்யாகராஜன். சுத்தமத்தளம், சங்கம், காஹளம் இவற்றுடன் நடக்கும் தியாகராஜ நடனம் ப்ரம்ஹாநந்தமாயிருக்கும். இவ்வூரின் புகழாகக் கூறப்படும் மற்ற இரு விஷயங்கள் அங்குள்ள கமலாலயம் என்ற தீர்த்தமும், த்யாகராஜனின் தேரும் ஆம். பங்குனியில் உத்திரபால்குனியன்று கணக்கில்லா ஜனங்கள் கமலாலய தீர்த்த ஸ்நானத்திற்காகக் கூடுவார்கள். மிகப் பெரியதாயிருக்கும் தியாகராஜப் பெருமானின் ரதத்தின் மஹிமை 'திருவாரூர் தேரழகு' என்று நம் நாடெங்கும் வழங்கும் பழமொழியினாலேயே விளங்கும். திருவாரூரில் தியாகேசனின் கருணையால் முன் நாகஸ்வரமும், நாட்டியமும், ஸங்கீதமும் மிகச் சிறப்பாய் வளர்ந்து வந்தன. திருவாரூர் ஞானம் என்று நாட்டியத்தில் கேழ்விப்படாதவர் இல்லை. திருவாரூர் கோயில் நாகஸ்வரத்திற்கே ஒரு தனிவழியும் அழகும் உண்டு.

ஸங்கிதாபிமானிகள் கர்னாடக ஸங்கிதத்திற்கு க்ஷேத்திரம் என்று கொண்டாடவேண்டிய ஸ்தலம் ஒன்று உண்டானால் அது இந்த திருவாரூரே. இங்குதான் தற்பொழுது கர்னாடக ஸங்கித மும்மூர்த்திகள் என்று கொண்டாடப்படும் தியாகய்யர், சியாமா சாஸ்த்ரிகள், முத்துஸ்வாமி தீக்ஷிதர் (அய்யரவர்கள், சாஸ்த்ரிகள், தீக்ஷிதர்) என்ற மூவரும் அவதரித்தனர். பால்யத்திலேயே, தியாகய்யர் குடும்பம் திருவயாறென்ற தஞ்சையையொட்டிய க்ஷேத்திரத்திற்குப் போய்விட்டது. சியாமா சாஸ்த்ரிகள் தஞ்சை நகருக்குப் போய்விட்டார். முத்துஸ்வாமி தீக்ஷிதர் மட்டும் திருவாரூரில் வெகுகாலம் இருந்தார். இம்மூவருள் தீக்ஷிதரே வயதில் சிறியவர்.

வடக்கு திக்கில் மகம்மதிய உபத்ரவும் அதிகரித்த பொழுது அங்கிருந்து காவேரீ தீரத்திற்கு அனேக ப்ராம்மண பண்டித குடும்பங்கள் வந்தன. இக்காரணத்தினாலேயே அவர்களில் ஒளத்தரார்கள், வடமர்கள் என்ற பெயர்

வழங்கி வருகிறது. இப்படி வந்த வடம குடும்பங்களில் காஞ்சிபுரத்தை அடுத்த விரிஞ்சிபுரத்திலிருந்து வந்த குடும்பம் ஒன்று திருவாரூரில் குடியேறியது. அதில் ராமஸ்வாமி என்ற குழந்தையொன்று பிறந்தது. ராமஸ்வாமி திருவிடமருதூரில் அந்த ஸமயம் வஸித்து வந்த முத்துவேங்கடமகி என்றவரை ஸங்கீதப் பயிற்சிக்காக அண்டினார். தஞ்சை ஆஸ்தானத்திலிருந்த கடைசி நாயக்க அரசனான விஜயராகவனால் தூண்டப்பட்டு 'சதுர்தண்டிப்ரகாசிகை' என்ற கர்னாடக ஸங்கீத மூலாதார நூலை யியற்றிய வேங்கடமகியின் பரம்பரையைச் சேர்ந்தவர் அந்த முத்துவேங்கடமகி யென்பவர். ராமஸ்வாமி தீக்ஷிதர் அவரிடம் பயின்று நல்ல வித்வானானார். இப்பொழுது வழங்கிவரும் 'ஹம்ஸத்வனி' என்ற ராகம் அவருடைய ஸ்ருஷ்டி என்று சொல்லப்படுகிறது. ராமஸ்வாமி தீக்ஷிதர் அனேக ஸாஹித்யங்கள் செய்திருக்கிறார். தஞ்சையரசன் அமரஸிம்மன் இவரை கௌரவித்தான். 'வேங்கடக்ருஷ்ண' முத்திரைவைத்து இந்த ராமஸ்வாமி தீக்ஷிதர் நாற்பத்துநான்கு ராகங்களில் மீனாக்ஷியின்மேல் ஒரு ராகமாலிகையும், ரீதிகௌளை, ஹிந்தோளம், மனோஹரி, பூர்ணசந்திரிகை முதலியவற்றில் தஸௌக வர்ணங்களையும், சங்கராபரணத்தில் தான வர்ணங்களையும், இன்னும் பல பதங்களையும், கீர்த்தனைகளையும் செய்திருக்கிறதாகப் பிரஸித்தி.

ராமஸ்வாமி தீக்ஷிதருக்கு வெகுகாலம் ஸந்தானம் ஏற்படவேயில்லை. வைத்தீச்வரன் கோயில் என்ற க்ஷேத்திரத்தையடைந்து அங்குள்ள வைத்தீச்வரன், பாலாம்பிகை, முத்துக்குமரன் என்ற மும்மூர்த்திகளின் ஸந்நிதியில் நாற்பதுநாள் உபவாஸமிருந்தார். உபவாஸத்தின் முடிவில், ராமஸ்வாமி தீக்ஷிதரின் கனவில் பாலாம்பிகை தோன்றி, முத்துமாலையொன்றைக் கொடுத்துவிட்டு மறைந்தாள். அவர் பெறப்போகும் குழந்தை முத்துமாலை முத்துமாலையாய் கீர்த்தனங்கள் தொடுக்கப்போ

கிறதென்றதை அது காண்பித்தது போலும். பாலாம்பி கையின் க்ருபையாலும், குலதைவதமான குமரக்கடவுளின் கருணையாலும் பிறந்த குழந்தைக்கு முத்துஸ்வாமியென்று பெயர் வைக்கப்பட்டது. முத்துஸ்வாமி பிறந்த பிறகு சின்னஸ்வாமி, பாலுஸ்வாமி என்று இருவர் பிறந்தனர். மூவருக்கும் தகப்பனார் ராமஸ்வாமி தீக்ஷிதரே ஸங்கீதம் சொல்லிவைத்தார். மூத்தவரான முத்துஸ்வாமி தீக்ஷிதர் ஏகஸந்தக்ராஹியாய் வித்யைகளைக் கற்றார். முத்துஸ்வாமி தீக்ஷிதர் பிறந்தது கி. பி. 1775, மன்மத வருஷம், பங்குனியில் திருவாரூர் த்யாகராஜாவின் வஸந்தோத்ஸவ தினம்.

முத்துஸ்வாமி தீக்ஷிதர் சிறுவராயிருக்கும்பொழுது, மணலியிலிருந்து முத்துக்ருஷ்ண முதலியாரென்றவர் ஸ்வாமி தரிசனத்திற்காகத் திருவாரூர் வந்திருந்தார். அவர் தன்னுடன் ராமஸ்வாமி தீக்ஷிதரையும், அவர் குடும்பத்தையும் மணலிக்கு அழைத்துக்கொண்டு வந்தார். மணலியில் ராமஸ்வாமி தீக்ஷிதரும் அவர் குமாரர்களும் வேங்கடக்ருஷ்ண முதலியாராலும், அவர் தம்பி சின்னய்யா முதலியாராலும் ஆதரிக்கப்பட்டு வந்தனர். மணலி சின்னய்யா முதலியாரின்மேல் ராமஸ்வாமி தீக்ஷிதர் தனது நூற்றெட்டு ராகதாள மாலிகையைப் பாடி கனகாபிஷேகம் பெற்றார் என்று சொல்லப்படுகிறது. ஒரு ஸமயம் தன் இரண்டாவது மகன் சின்னஸ்வாமிக்குப் பார்வை மங்கிப்போக, ராமஸ்வாமி தீக்ஷிதர் திருப்பதி சென்று, வேங்கடாசலபதியின்முன் வேகவாஹினி ராகத்தில் ஆரம்பித்து நாற்பத்தெட்டு ராகங்கள் பாடி, சின்னஸ்வாமிக்கு திரும்பிப் பார்வையை உண்டுபண்ணினார் என்று ராமஸ்வாமி தீக்ஷிதரின் ஸங்கீத மஹிமையைப்பற்றி அற்புத நிகழ்ச்சியொன்று சொல்லப்படுகிறது. இந்த சின்னஸ்வாமி தீக்ஷிதரும் சில உருப்படிகள் செய்திருக்கிறார். பாலஸ்வாமிக்கு மணலி முதலியார் ஒரு ஐரோப்பியரைவைத்து பிடில் கற்றுக்கொடுத்தார்; அவரும் நல்ல ஸாஹித்ய சக்தி வாய்ந்தவர்.

மணலியில் இவர்கள் இருக்கும்பொழுது சிதம்பரநாத ஸ்வாமிகள் என்ற மஹான் ஒருவர் தீக்ஷிதரைத் தன்னுடன் காசிக்கு அழைத்துக்கொண்டுபோய் ஆறு வருஷம் தன்னுடன் வைத்துக்கொண்டிருந்தார். இந்த மஹான் யோக விஷயங்களையும், ஸ்ரீவித்யையும் முத்துஸ்வாமி தீக்ஷிதருக்கு உபதேசித்தார். கர்னாடக ஸங்கீத வித்வானான முத்துஸ்வாமி தீக்ஷிதர் வடக்கே காசியிலிருக்கும்பொழுது வேண்டுமளவு ஹிந்துஸ்தானி பத்ததியை நன்கு கேட்டுக் கொண்டார். தனக்குள்ள வடக்கு இசைப்பழக்கத்தை இரண்டு கீர்த்தனங்களில் காட்டியிருக்கிறார். அவை யமுனாகல்யாணிலுள்ள 'ஜம்பூபதே' என்பதும், பிருந்தாவன ஸாரங்காவிலுள்ள 'ஸௌந்தர ராஜம் ஆச்ரயே' என்றதும்.

காசியிலிருந்து திரும்பி வந்தபிறகு, முத்துஸ்வாமி தீக்ஷிதர் தம் குலதைவமாகிய முருகனைத் திருத்தணியில் தரிசனம் செய்யப்போனார். தன்னைப் பெற தன் தகப்பனார் உபவாஸம் இருந்தாற்போல், தானும் ஸுப்ரம்ஹண்ய ஸந்நிதியில் ஒரு மண்டலம் உபவாஸத்துடன் த்யானம் செய்தார். ப்ராகாரத்தின் ஒரு பக்கத்தில் தீக்ஷிதர் தியானத்திலிருக்கும்பொழுது, ஒரு கிழவர் அவர் முன்தோன்றி, அவர் வாயில் கற்கண்டைப் போட்டார். கண்ணைத் திறந்ததும், விரைவாய் மயிலின்மீது ஏறி மறையும் ஷண்முகனைப் பார்த்தார். அவர் உள்ளத்தில் ஆனந்த வெள்ளம் கிளம்பி, கீர்த்தன ரூபமாய் வெளிவந்தது. நீ இனி கற்கண்டினுமினிய இசையைப் பெருக்கும்படியான பாட்டுகளை இயற்றப்போகிறாய் என்று சொன்னாற்போலிருந்தது, கடவுளின் அந்தச் சிறு லீலை. தன் முதல் கீர்த்தனத்தை தீக்ஷிதர் அப்பொழுது பாடினார். அது 'ஸ்ரீ நாதாதி குருகுஹோ ஜயதி' என்று மாயாமாளவ கௌளத்திலுள்ளது. குஹக்கடவுளை தன் குருவாய்க் கருதி, தான் எழுதும் ஒவ்வொரு கீர்த்தனைக்கும் "குரு குஹ" என்று முத்திரை வைத்தார். ஸுப்ரம்

ஹரணியனைப்பற்றிமட்டும் ஸுமார் இருபது கீர்த்தனங்கள் பாடியிருக்கிறார். அவற்றுள் விசேஷமானவை ஆனந்த பைரவியிலுள்ள 'மானஸ குரு குஹ ரூபம் பஜரே,' சாமாவிலுள்ள 'குரு குஹாய பக்தானுக்ரஹாய,' பூர்வியிலுள்ள 'ஸ்ரீ குரு குஹஸ்ய தாஸோஹம்,' பாடியிலுள்ள 'ஸ்ரீ கருணாபாலிதோஸ்மி,' தேவக்ரியை (சுத்த ஸாவேரி)யிலுள்ள 'ஸ்ரீ குரு குஹ தாரயாசு மாம்' என்றவை.

திருத்தணிகையிலிருந்து தான் அடைந்த இசைக்கவி சக்தியின் பேரானந்தத்துடன் தீக்ஷிதர் காஞ்சி க்ஷேத்திரத்திற்கு வந்து காமாக்ஷியை மனோஹரியிலுள்ள 'கஞ்ஜதளாயதாக்ஷி,' ஹிந்தோளத்திலுள்ள 'நீரஜாக்ஷி' முதலிய கீர்த்தனங்களில் பாடினார். காஞ்சியில் உபநிஷத் ப்ரம்மம் என்ற மஹானொருவரை சந்தித்து அவரிடமிருந்து வேதாந்த உபதேசங்களைப் பெற்றார்.

பிறகு தீக்ஷிதர் திருவாரூரிலேயே தங்கினார். இடைவிடாது தியாகேசனையும், மற்றுமுள்ள தைவங்களையும் ஸேவிப்பதும் அவர்களின் புகழைப் பாடுவதும், அப்போதைக்கப்போது க்ஷேத்ரயாத்ரை செய்து பற்பல ஸ்தலங்களிலுள்ள மூர்த்திகளைப் பாடுவதும் தீக்ஷிதரின் விரதமாக ஆயிற்று. போனஸ்தலங்கள் எல்லாவற்றிற்கும் கீர்த்தனங்கள் செய்தார். பஞ்சலிங்க கீர்த்தனைகளென்று ப்ருத்வீ, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம், இவ்வைந்தின் ஸ்தலங்களான காஞ்சி, ஜம்புகேச்வரம், அருணாசலம், காளஹஸ்தி, சிதம்பரம், இவ்வைந்துக்கும் ஐந்து கீர்த்தனங்கள் செய்தார். இவை: 'சிந்தய மாகந்த மூல கந்தம்' என்ற பைரவி கீர்த்தனம்; 'ஜம்பூபதே' என்ற யமுனா கல்யாணி கீர்த்தனம்; ஸாரங்காவிலுள்ள 'அருணாசல நாதம்'; உசேனியிலுள்ள 'ஸ்ரீ காளஹஸ்தீசம்'; 'கேதாரத்திலுள்ள 'ஆனந்த நடன ப்ரகாசம்.' ராகு, கேதுவை விலக்கி மற்ற எழு க்ரஹங்களுக்கும் எழு கீர்த்தனைகள் எழுதினார். மாயூர க்ஷேத்திரத்திலுள்ள அம்பிகையின் பேரில் ஸ்ரீ வித்யோபாஸனை முறையில் நவாவரண கீர்த்-

தனைகளைச் செய்தார். திருவாரூரில் உள்ள ஒவ்வொரு மூர்த்தியின்மேலும், திருவாரூரைச் சுற்றியுள்ள சிறு க்ஷேத்திரங்களைப்பற்றியும் பல கீர்த்தனைகள் செய்தார். த்யாகராஜனின்மேல் ஸம்ஸ்க்ருதத்தில் உள்ள எட்டு வேற்றுமைகளுக்கும் எட்டு கீர்த்தனைகள் எழுதினார்: அடாணா, 'தியாக ராஜோ விராஜதே'; யதுகுலகாம்போஜி, 'த்யாக ராஜம் பஜரே'; ஸாலக பைரவி, 'த்யாக ராஜேன ஸம் ரக்ஷிதோஹம்'; ட்யாகடா, 'த்யாகராஜாய நமஸ்தே'; தர்பார், 'த்யாகராஜாதன்யம் ந ஜானே'; 'ஸ்ரீ த்யாகராஜஸ்ய பக்தோ பவாமி (ராகம் தெரியவில்லை)'; ஸாரங்கா, 'த்யாக ராஜே க்ருத்யாக்ருத்யமர்பயாமி'; வீரவஸந்த, 'த்யாக ராஜ மாம் தாரயாசு.' இவற்றைத் தவிற ஸ்ரீராகத்தில் 'ஸ்ரீ த்யாகராஜ மஹத்வஜாரோஹ' என்று அவருக்கு நடக்கும் உத்ஸவங்களையே தைவாகாரமாய் பாவித்து ஒரு கீர்த்தம் செய்தார். 'த்யாகராஜயோக வைபவம்' என்று ஆனந்தபைரவியிலும், 'த்யாகராஜ பாலயாசு மாம்' என்று கௌளையிலும் இரண்டு கீர்த்தனங்கள் செய்தார். தனக்கு ஏற்பட்ட ஆங்கில இசைப் பழக்கத்தையும் தன் கீர்த்தனங்களில் காண்பித்திருக்கிறார். த்யாகராஜாவின்மேல் இரண்டு நோட்டுகள் செய்திருக்கிறார்.

•

திருவாரூரில் உள்ள நீலோத்பலாம்பிகையின் மேல் அவர் ஒரு கீர்த்தனம் பாடினார்; அங்குள்ள கமலாம்பிகையின்மேலுள்ள அளவிலா பக்தியால் அந்த மூர்த்தியைப்பற்றி கல்யாணியிலுள்ள 'கமலாம்பாம் பஜரே' முதலிய கீர்த்தனங்களைத்தவிற, ஸ்ரீ வித்யோபாஸனை க்ரமத்தை யனுஸரித்து நவாவரண கீர்த்தனைகளும் செய்தார். திருவாரூரில் கமலாலய தீர்த்தத்தின் ஈசான மூலையிலுள்ள மிகப் பிரஸித்தி பெற்ற மாத்துரைத்த பிள்ளையாரைப்பற்றியும், கமலாம்பாள் ஸந்நிதியிலுள்ள வல்லப கணபதியைப்பற்றியும், தியாகராஜ ஸந்நிதியிலுள்ள மூலாதார கணபதியைப்பற்றியும் கீர்த்தங்கள் பாடியிருக்கிறார்: ஹம்ஸத்வனி, 'வாதாபி கணபதிம்'; கௌளம்,

'ஸ்ரீ மஹா கணபதி'; ஸ்ரீராகம், 'ஸ்ரீ மூலாதார சக்ர விநாயக.' திருவாரூர் பஞ்சலிங்க கீர்த்தனைகளென்று ஐந்து இருக்கின்றன. இதைத்தவிர, அவ்வூரிலுள்ள பழனியாண்டவன், விஜயபுரம் மாரியம்மன் (ரேணுகா), பக்கத்திலுள்ள புலிவலத்தில் எழுந்தருளியிருக்கும் வெங்கடாசலபதி, குழிக்கரை என்ற பக்கத்துக்ராமத்திலுள்ள விச்வநாதன், அன்னபூர்ணி முதலிய மூர்த்திகளையெல்லாம் பற்றிக் கீர்த்தனைகள் செய்து இருக்கிறார். மன்னார்குடியென்ற சம்பகாரண்யத்திலுள்ள ராஜகோபாலமூர்த்தியைப்பற்றி ஸாவேரியில் 'ஸ்ரீராஜகோபால,' பைரவியில் 'பாலகோபால,' த்விஜாவந்தியில் 'சேதச்ஸ்ரீ' என்ற மூன்று கீர்த்தனைகளையும், நாகப்பட்டிணத்தில் விளங்கும் நீலாயதாக்ஷியம்மன்மேல் 'அம்ப நீலாயதாக்ஷி' என்று நீலாம்பரியிலும், நாயகியில் 'ரங்க நாயகம்' என்று ஸ்ரீரங்கநாதனைப்பற்றியும் பாடினார். இப்படி க்ஷேத்திரம் க்ஷேத்திரமாய் யாத்ரை செய்து அவர் பக்தியினால் பாடிய பாட்டுகள் ஐநூறு இருக்கின்றன. ஸ்ரீவித்யை, மந்திர சாஸ்திரம், ஜ்யோதிஷம் முதலியவற்றில் தீக்ஷிதருக்கிருந்த ஞானத்தை அவை விளக்கிக் காட்டுகின்றன. அவருடைய கீர்த்தனங்களை வைத்துக்கொண்டால், தமிழ் நாட்டில் ப்ரஸித்திப் பெற்ற ஸ்தலங்கள் எவை, அந்த க்ஷேத்திரங்களின் மாகாத்மியம் என்ன, அவ்வூரில் என்ன பெயருடன் ஆண்டவனும் அம்பிகையும் எழுந்தருளியிருக்கிறார்கள், அங்கு தீர்த்த விசேஷமென்ன, முதலியன அட்டவணையில் காண்பது போல் காணப்படும். மேலும் ராமாஷ்டபதிக்கு ராக தாளங்களையும் அமைத்தார்.

தனது பிற்காலத்தில் தீக்ஷிதர் மதுரை சென்று மீனாக்ஷியை "மீனாக்ஷி" என்று கமககிரியாவிலும் 'மாம் அவ மீனாக்ஷி' என்று வராளியிலும் துதித்தார். இதற்கு முன்பே, தீக்ஷிதரின் இரு ஸஹோதரர்களில் ஒருவரின் காலமாய் விட்டது. மற்றொருவர் (பாலஸ்வாமி தீக்ஷிதர்) எட்டயாபுரம் ஸம்ஸ்தானத்தில் இருந்துகொண்டிருந்தார். பாலஸ்வாமி தீக்ஷிதர் எட்டயாபுரம் ராஜாவின்மீது தருக்

கள் பாடியிருக்கிறார். முத்துஸ்வாமி தீக்ஷிதரும் வயது காலத்தில் எட்டயாபுரத்தைக் குறித்துச் சென்றார். போகும் வழியில் மழையில்லாமையால் மரங்கள் காய்ந்து போய், நிலம் வெடித்துக்கிடந்தது ; குடிகள் தவித்துக் கொண்டிருந்தனர். அவர்களின் துயரம் தாங்காமல், தீக்ஷிதர் அமிருதவர்ஷிணி ராகத்தில் 'அனந்தாம்ருதாகர்ஷிணி' என்று பாடினார். "வர்ஷய, வர்ஷய, வர்ஷய'' என்று அவர் பாடும்பொழுது இடியும் மின்னலுமாய் மழை கொட்ட ஆரம்பித்தது. இவ்வத்புதத்தைக் கேட்டு எட்டயாபுரம் ராஜா இவரை வழியில் கண்டு கௌரவித்து தன் ஆஸ்தானத்திற்கு அழைத்துக்கொண்டு போனான். அவரை அவர் கடைசிகாலம் வரைக்கும் தன் ஆஸ்தானத்திலேயே ஆதரவாய் வைத்துக்கொண்டிருந்தான்.

பக்தியும், விரக்தியும் நிறம்பியவர் தீக்ஷிதர். ஈச்வரனைப்பாடிய வாயால் அவர் மானிடனைப் பாடினதில்லை. தஞ்சை அரசாங்கத்திற்குப் போவென்று யாரோ ஒருவர் அவரிடம் சொன்னாராம். அதற்கு அவர் பணம் வேண்டுமானால் லக்ஷ்மியைப் பாடுகிறேன் ; மனிதனையேன் பாடவேண்டுமென்று அர்த்தம் படைத்த 'ஹிரண்மயீம் லக்ஷ்மீம் பஜாமி, ஹீன மானவாச்ரயம் த்யஜாமி' என்று லலிதா ராகத்தில் பாடினார். திருவாரூரில், அக்காலத்தில் தேவஸ்தானத்தை மேற்பார்வை செய்துவந்தவர் பக்கத்திலுள்ள குழிக்கரை மிராசுதாரான வைத்யலிங்க முதலியார் என்றவர். அவர் தீக்ஷிதரை மிகவும் ஆதரித்து வந்தார். அவர் க்ராமத்திலுள் அன்னபூர்ணியையும், விச்வநாதனையும் பற்றி தீக்ஷிதர் பாடியிருக்கிறார். ஆனால் அம்முதலியார் தன்னைப் பற்றி தீக்ஷிதர் பாடவேண்டுமென்றபொழுது, உனக்கு உன் விச்வநாதப்ரபு அருள் செய்வாராக என்று வேண்டிக்கொள்கிறேன் என்று சொல்லி, விச்வநாதன்மேல் பதினொன்கு ராகங்களில் ஒரு ராகமாலிகை பாடினார். திருவாரூரிலிருக்கும்பொழுது தீக்ஷிதருக்கு வருமையின் கஷ்டம் அடிக்கடி உண்டு. ஒரு ஸமயம் அவ

ருடைய கஷ்டத்தைப் பொருக்காமல், அவர் சிஷ்ய வர்க்கத்தைச் சேர்ந்த கமலம் என்ற தாஸி தன் நகைகளை அடகுவைத்துப் பணம் வாங்கிக்கொடுக்க நினைத்தாள். அவளுடைய உத்தேசத்தைத் தெரிந்துக்கொண்டதும், தீக்ஷிதர் 'நீ எவ்வளவு நாளைக்கு நகை கொடுத்து உதவ முடியும்' என்று சொல்லிவிட்டு, மேற்சொன்ன யதுகுல காம்போஜியிலுள்ள 'த்யாகராஜம் பஜரே' என்ற கீர்த்தனத்தைப் பாடினார். மறுநாட் காலை; கமலம் வரும்பொழுது 'த்யாகராஜம் பஜரே' பாடியதின் பயனைக் கண்டு வியந்தாள். அவ்வூரிலுள்ள ஸத்ரத்தில் தஞ்சை அரசாங்க உத்தியோகஸ்தர் ஒருவர் வந்து தங்கப்போகிறாரென்று ஏராளமான ஸாமான்கள் சேகரிக்கப்பட்டிருந்தன; திடீரென்று தான் வரவில்லையென்று அவர் தகவல் அனுப்ப, சேர்த்துவைத்த ஸாமான்களை எப்படி நல்ல வழியில் விநியோகம் செய்வது என்று யோஜித்து, சத்ரம் அதிகாரி தீக்ஷிதர்தான் அவற்றிற்கு தகுந்த பாத்திரம் என்று தானம் செய்துவிட்டான். தீக்ஷிதர் மற்றொரு ஸமயம் திருவாரூருக்கு அருகிலுள்ள கீவளூருக்குப்போய் அக்ஷய லிங்கத்தைக்கண்டு பாடவேண்டுமென்று வெகு ஆவலுடன் வந்து, அனுஷ்டானத்தின்பிறகு, ஸந்நிதிக்கு வந்ததும், குருக்கள் கதவைத் தாளிட்டுக்கொண்டுபோனான். 'குருக்களே, ஸ்வாமியை தர்சனம் செய்து பாடவேண்டும், கொஞ்சம் தாமதித்துப் போகலாமோ' என்று தாழ்ந்து தீக்ஷிதர் கேட்டார். 'என்னால் தாமதிக்கமுடியாது; ஸ்வாமி நாளை வரையில் தாமதித்திருப்பார்; நாளை வந்து பாடலாம் போம்' என்றார் குருக்கள். குருக்கள் போனதும் பூட்டிய கதவுக்குமுன் நின்றுக்கொண்டு சங்கராபரணத்தில் 'அக்ஷய லிங்க விபோ' என்று பாடினார். பாட்டு முடிவடையும் ஸமயம், கதவு படீரென்று திறந்து கொண்டது. இன்னும் பல விதமாய் தீக்ஷிதரின் மஹிமையைப்பற்றி கதைகள் சொல்லப்படுகின்றன.

தீக்ஷிதர்களின் சிஷ்யர்களில் அனேகர் நாகஸ்வர வித்வான்களும், நட்டுவர்களும், கமலத்தைப்போன்ற தாசி

களுமாயிருந்தனர். திருவாரூர் சுத்தமத்தளம் தம்பியப்பன் என்றவனும், திருக்கடயூர் பாரதி என்பவரும், புகழ்பெற்ற நட்டுவ ஸகோதரர்களான பொன்னய்யா, வடிவேலு, சிவானந்தம் என்போரும் தீக்ஷிதர் சிஷ்யர். வடிவேலு என்பவர் திருவனந்தபுரம் சென்று வெகு க்யாதியுடனிருந்தார். தீக்ஷிதர் காலமான பிறகு பொன்னய்யா என்பவர் தீக்ஷிதரின்மேல் தெலுங்கில் ஒரு கீர்த்தனம் பார்த்தாகத்தெரிகிறது. இவர்களைத்தவிர ஆவிடையார் கோயில் வீணை வெங்கடரமணய்யா, தேனூர் ஸுப்ரம்மண்ய அய்யா, வேட்டனூர் ஸுப்பராயலு, கொரநாடு ராமஸ்வாமி, திருவழுந்தூர் வில்வவனம், திருவாரூர் அய்யாஸ்வாமி, வள்ளலார் கோயில் அம்மணி என்றவர்களும் தீக்ஷிதர் சிஷ்யர்.

தீக்ஷிதர் தன் கடைசி ஆறேழு வருஷங்களை ஸந்துஸ்டராய் எட்டயாபுரத்தில் கழித்தார். தீக்ஷிதருக்குக் குழந்தையில்லை; தன் ஸஹோதரரின் பெண்ணின் பிள்ளையை ஸ்வீகாரம் செய்துகொண்டார். அவர்தான் ஸுப்பராம தீக்ஷிதர். முத்துஸ்வாமி தீக்ஷிதரைப்போல ஸாகித்யங்களை அவரும் செய்திருக்கிறார்; சிலர் ஸுப்பராம தீக்ஷிதரின் க்ருதிகள் தீக்ஷித க்ருதிகளைவிட அழகாயிருக்கின்றன என்றும் அபிப்ராயப்படுகின்றனர். இந்த ஸுப்பராம தீக்ஷிதர் எட்டயாபுரத்திலிருந்து ஸங்கீத ஸம்பிரதாய ப்ரதர்சினி யென்று மூன்று பாகங்களில் தங்கள் பரம்பரையிலுள்ள ஸங்கீதத்தையெல்லாம் வெளியிட்டார். இப்புத்தகத்தில் தீக்ஷித க்ருதிகள் அனேகமாய் எல்லாம் இருக்கின்றன. ஸம்பிரதாயப்ரதர்சினி தெலுங்குலிபியிலிருப்பதால் தீக்ஷித கீர்த்தனங்களை தமிழில் வெளியிட வேண்டியது அவச்யமாயிருக்கிறது. தீக்ஷிதரின் சிஷ்ய பரம்பரைச்சேர்ந்த நாகஸ்வர வித்வான் ஒருவர் அதற்கு ஏற்பாடெல்லாம் செய்து வைத்திருக்கிறார்.

தீக்ஷிதர் வீணையிலும் வாய்ப்பாட்டிலும் திறமை பெற்றவர். அவரது கீர்த்தனங்களெல்லாம் மிக ஆற்றலாய்,

நல்ல விலம்பகாலத்தில், ஆழ்ந்து, நன்ருய் கமகங்களுடன் பாடவேண்டியவை ஒவ்வொரு பெரிய கீர்த்தனையும் அதனதன் ராக ஸம்பந்தமாய் லக்ஷணகீதம் போல் விளங்கு கிறதென்று வித்வான்களின் அபிப்ராயம். க்ஷேத்திரிய ரின் பதங்களை அனுஸரித்தவை தீக்ஷித கீர்த்தனங்கள். குடுகுடு என்று தளுக்காய் பாடிவிட்டுப் போய்விடும் தற் கால வித்வத்தினுல் நிர்வகிக்க முடியாமற் போனதாலேயே, தீக்ஷிதரின் ஐநூறு கீர்த்தனங்களில் வ்யவகாரத்தில் ஸுமார் முப்பது கீர்த்தனங்களே உலவுகின்றன. தீக்ஷித கீர்த்தனை அசைந்து போகும் அழகு, அவர் ஊரான திரு வாரூரின் தேர் அசையும் அழகை ஒத்திருக்கிறது. தீக்ஷி தர் பெரும்பாலும் ஸம்ஸ்க்ருதத்தில்தான் கீர்த்தனங்களைப் பார்த்தார். அவற்றில் குரு குஹ என்ற முத்ரையும், பெரும்பாலும் ராக முத்ரையும் காணப்படும். ஒரு மணி ப்ரவாள கீர்த்தனம் ஒன்று தமிழிலும் ஸம்ஸ்க்ருதத்திலு மாயும், தெலுங்கில் சில வர்ணங்களும் தருக்களும் எழுதி யிருக்கிருர்.

முத்துஸ்வாமி தீக்ஷிதர் திடீரென பரலோகமடைந் தார். எட்டயாபுரத்தில் ஒரு நாள் தன் சிஷ்யர்களின் பாட்டைக் கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தார். அவர் கள் 'மீனுக்ஷி' என்ற கமகக்ரியை கீர்த்தனத்தைப் பாடிக் கொண்டிருந்தனர். "மீன லோசனி பாசமோசனி" என்ற இடம் வரும்பொழுது, தீக்ஷிதர் தன் பாசங்களை தேவி போக்குவதுபோல் நினைத்தார்; உடனே பாசம் நீங்கிற்று; தீக்ஷிதரின் ஆத்மா அம்பிகையின் அடியை அடைந்தது. தீக்ஷிதர் அறுபது வயது இருந்தார். அவர் பரமபத மடைந்தது கி. பி. 1835, தீபாவளி தினம். ஆகவே இவ் வருஷ தீபாவளியுடன் பூர்ணமாய் நூறு ஆண்டுகள் ஆயின. இதர நாடுகளில் நூறு வருஷக் கொண்டாட்டங்கள் கவி களுக்கும் மற்ற துறைகளில் புகழடைந்தவர்களுக்கும் நடத்துகிருர்கள். தீக்ஷிதரின் காலமாகி இன்றுடன் ஆகும் நூறு வருஷ காலத்தைக் குறித்து, தீக்ஷிதரின்

மகிமையைக் கொண்டாடி, அவரது கீர்த்தனங்களை ஸம்ஸ்க்ருத லிபியிலும், தமிழிலும் வெளியாக்கிப் பரப்ப வேண்டியது நமது கடமை.

कमलापुरी जयतु पुण्यस्थलाग्र्या
त्यागेश्वरो जयतु वरदेश्वराग्र्यः ।
श्रीदीक्षितो जयतु तत्कीर्तनञ्च
कार्णाटिकी जयतु सङ्गीतविद्या ॥

# SRI MUTHUSWAMY DIKSHITAR

Tiruvarur is a glorious name among the numberless shrines that stud this blessed Tamil land. Its renown goes back into the early Chola times, when reigngd there the Manunithikanda Chola, the king whose Dharma was such as to demand the life of his own son for the death of a poor calf. The town is presided by a Rajamurthi and Natanamurthi of God Siva, Sri Thyagaraja, who has inspired the great Tevaram Saints and drawn the hearts of the Nayanars. Saint Sundaramurti belongs to Tiruvarur and 'Arurpirandon', one born at Tiruvarur, is counted as one of the sixty three Shaivite saints. In recent times, Tiruvarur, the greatest of the shrines near Tanjore, was the favourite shrine of the Tanjore Telugu and Maratta Kings. The place was renowned for its culture; great pundits lived in and around it and music and dancing flourished by the grace of Lord Tyagaraja, Himself the exponent of the dances called Ajapanatana, Hamsanatana and so on. Nagasvara and Natya were its special arts and who has not heard of Tiruvarur Jnanam, the last of the great exponents of Natya at that place?

Thrice holy is Tiruvarur to the lover of our music; for it is this small place that gave birth to the Carnatic music trinity—the Trimurtis—Sri Tyagaraja, Sri Syama Sastriar and Sri Muthuswamy Dikshitar. All the three celebrated composers were contemporaries. Tyagayya was the eldest and he blessed this earth with his life for the longest period, while the two others left it earlier. Of the three, Muthuswamy Dikshitar, was the youngest and he alone stuck to Tiruvarur for the longest time while Tyagayya left for Tiruvayar or the Panchanada Kshetra and Syama Sastriar for Tanjore proper.

Muthuswamy Dikshitar was born in Manmatha, 1775 A. D. His grandfather was Venkatesvara Dikshitar and father was Ramaswamy Dikshitar, a famous composer who is credited with having invented the Raga Hamsadhvani and who has composed a Raga Tala Malika covering all the hundred and eight Talas, on his patron, Chinnayya Mudaliar of Manali. Their ancestors belonged to Virinchipura near Kanchi and they were Auttaravadamas. Ramaswamy Dikshitar had three sons, the eldest of whom is Muthuswamy Dikshitar. The two others were Chinnaswami and Baluswami Dikshitars. The great composer's birth was attended by a significant event. Ramaswamy Dikshitar was not blessed with children up to his fortieth year. It is said that he undertook a fast for forty days in the presence of God Muthukumaraswamy in the shrine at Vaidyesvarankoil. At the end of the fast, Ramaswamy Dikshitar had a dream and a present of a pearl-necklace from Goddess Balambika. The divine present was soon followed by another, and there appeared the great music composer to string pearl-necklace after pearl-necklace of Kirtanas.

Dikshitar's father, Ramaswamy Dikshitar, learnt music at the feet of Muddu Venkatamakhin, a descendent of the renowned Venkatamakhin, of the Tanjore Nayak Court and author of the music treatise, the Chaturdandiprakasika. Ramaswamy Dikshitar himself taught music to his three sons. The eldest, Muthuswamy Dikshitar, is said to have been an Ekasantagrahi, one who learnt everything by hearing once. He learnt music and Sanskrit and attained proficiency in astrology. While he was young, a zamindar of Manali, near Madras, Muthukrishna Mudaliar, by name who had been to Tiruvarur on pilgrimage brought the family of Dikshitar to his place with him.

While Dikshitar was yet a boy there happened a noteworthy incident in his life. One day a Sannyasi named Chidambaranatha Swami visited Ramaswamy Dikshitar and stayed as his guest for a while. He caught sight of the boy, turned to his father and told him that his son

would be a great musical genius and a renowned composer. The Swami wanted to shower his blessings on the boy and took him along with himself to Benares. It is under this Chidambaranatha Swami that Dikshitar had his initiation in Srividya. The sojourn in the North and his stay in Benares for about six years were fruitful in another direction also. For it was then that the keen ears of the young Carnatic musician drank some of the Northern airs. The impress of the acquaintance with the North Indian style can be seen especially in the two compositions of his— 'Jamboo Pate' in Raga Yamuna Kalyani and 'Soundararajam Asraye' in Raga Brindavana Saranga.

On his return from the North, he went to the hill shrine at Tiruttani near Madras to worship his family deity God Subrahmanya. His father fasted forty days in deep meditation upon Lord Subrahmanya to get this celebrated musician and the musician himself fasted forty days before the same God to become the great composer that he was to be. It was a corner of the temple and Dikshitar was alone in deep Samadhi when there appeared before him an old man who put sugar into his mouth and asked him to close his eyes. The physical eyes of the devotee closed and when they again opened along with the inner, lo! there stood before him mounted upon the peacock his Lord, God Subrahmanya, with his two consorts, Valli and Devasena. The effulgent vision inspired the musician and the sugar which the old man just then placed on his tongue flowed out in long streams of melodies. The first song of Dikshitar was sung at this juncture: 'Srinathadi guru guho jayati, jayati' in Raga Mayamalavagaula, which was followed by many more; for the great vision drew fresh and fresh songs from the heart of the devotee. Besides being his traditional family deity, God Subramanya specially revealed himself to him. On Him Dikshitar has sung about twenty songs. He became his preceptor, so to say and so it is that each song of Dikshitar has the Mudra of 'Guru Guha' at the end, 'Manasa guru guha rupam bhaja re' in Raga Ananda Bhairavi, 'Guruguhaya Bhaktanugrahaya' in Raga Sama, 'Sri guru guhasya dasoham' in Raga Poori, 'Srikaruna-

paliatosmi' in Raga Padi, and 'Sriguruguha taraysu mam' in Raga Devakriya (Suddhasaveri), are some of the more renowned of Dikshitar's songs on Subrahmanya.

From Tiruttani, revelling in his newly acquired divine gifts, Dikshitar came to Kanchi to see Goddess Kamakshi who inspired many songs, the most noteworthy of which are 'Kanjadalayatakshi' in Raga Manohari and 'Nirajakshi' in Raga Hindola. At Kanchi, he came into contact with a great man named Upanishad Brahmam from whom he learnt Vedanta, of which he thence became an ardent follower and exponent.

Dikshitar then settled at Tiruvarur worshipping God Tyagaraja and now and then making pilgrimages to all the shrines in South India. Wherever he went, whatever shrine he visited and whichever deity he saw, he worshipped with the gift of his songs. The following are the more important of these songs: the Pancha Linga Kirtanas, his five songs on the Gods representing the five elements of Earth, Water, fire, Air and Ether, at the shrines Kanchi, Jambukesvara, Arunachala, Kalahasti and Chidambaram; these songs are 'Chintaya makanda mula kandam' in Bhairavi, 'Jamboo pate' in Yamuna Kalyani, 'Arunachalanatham' in Saranga, 'Sri Kalahastisam' in Useni and 'Ananda natana prakasam' in Kedara; another series of songs is that on the Navagrahas, the nine planets, excluding Rahu and Ketu; he composed a series of Navavarana Kirtanas on the Goddess at Mayavaram; the most important songs are those he composed on the many deities at Tiruvarur itself; on the chief deity, Tyagaraja, he has sung many pieces of which 'Thyagaraja yoga vaibhavam' in Ananda bhairavi and 'Tyagarajaya namaste' in Byagada are well-known; the other compositions of his on Tyagaraja are 'Tyagarajo virajate' in Atana, 'Tyagarajam bhaja re' in Yadukulakambhoji, 'Tyagarajena Samrakshitsham' in Salaga Bhairavi, 'Tyagarejadanyam na jane' in Darbar, 'Tyagaraje Krityakrityamarpayami' in Saranga, 'Viravasanta Tyagaraja mam taraysu' in Viravasanta, 'Sri Tyagaraja mahadhvajaroha' in Sriraga describing the festivals of that God, 'Tyagaraja Palayasu

mam' in Gaula, and two 'Notes,' as they are called in musical parlance, 'Muchkunda varada' and 'Somaskandam Sivanandakandam.' The Goddess Kamalamba at Tiruvarur was a favourite of Dikshitar and on her especially he has composed a Navavarana series; he has sung her eleven times; Tyagaraja's consort, Nilotpalambika, is sung is one song and the renowned Vinayaka on the north-eastern corner of the tank has been praised in the songs 'Vatapi ganapatim' in Hamsadhvani and 'Sri Maha Ganapati' in Goula; in a Kirtana in Sriraga, 'Srimuladhara chakra Vinayaka', a form of Ganapati as presiding over the Muladharachakra found in front of Tyagaraja's principal shrine has been sung; besides almost all the deities at Tiruvarur, Achaleswara, Anandesvara, Siddhesvara and others have been sung. There is not a single deity in and around Tiruvarur of which Dikshitar has not sung. Of the songs composed by him on the deities at other famous shrines, mention may be made of 'Sri Rajagopala' in Saveri, 'Bala Gopala' in Bhairavi and 'Chetassri' in Dvijavanti on God Sri Rajagopala at Mannargudi or Champakaranya Kshetra; and also of 'Amba Nilayatakshi' in Nilambari on the Goddess at Negapatam, 'Ranga Nayakam' in Nayaki on Sri Ranganatha at Srirangam, 'Pahimam Ratnachala Nayike' and 'Nilakantham bhaje' in Kedara gowla. His songs on the forms of Devi at the several shrines show his proficiency in Srividya lore, his songs on the Navagrahas, his acquaintance with astrology, and his Kirtanas which cover almost all the most important shrines in South India are an intimate guide to the pilgrim in the wealth of information on Sthalamahatmya contained in them.

Later in life, Dikshitar went to the south on a pilgrimage. At Madura he sang 'Minakshi' in Gramakakriya, 'Mamava Minakshi' in Varali and other Kirtanas. Much earlier to this time, Dikshitar had lost one of his two brothers and the other had gone to the Court of Ettayapuram in Tinnevelly District where he was being patronised by the chief, Venkateswara Eddappan, a scholar in Sanskrit, a musician and composer and a liberal patron of

arts and letters. Thither Dikshitar turned his steps and while he was going, he found the country suffering from draught and the crops withering. The appearance of the renowned musician reminded the people of the divine powers of music. When they submitted to him their plight, Dikshitar melted into pity and in the fullness of his feeling, sang the melody of Amrita varshini, 'down pour of nectar' in the composition 'Anandamritakarshini.' As Dikshitar's voice rose and the words 'Varashaya Varshaya' were sung, the clouds had gathered and down came the rains with thunder and lightning. The Raja of Ettayapuram heard of the mircle, met Dikshitar half way and kept him as his court musician till his last days.

Dikshitar possessed the necessary requisites for great music. He was poor and had great Vairagya. He was such a Bhakta that he would never sing the praise of mortal man with the same voice that sang of omnipotent God. It is said that he was once asked to go to the Tanjore Court and immediately came out the song in Raga Lalita 'Hiranmayim Lakshmim bhajami : hina manavasrayam tyajami' 'if I want wealth, I will rather seek Goddess Lakshmi ; I shun these petty mortal beings.' At Tiruvarur, the chief local Zamindar, Vaidyalinga Mudaliar of the adjacent village of Kuzhikkarai, whose descendents are still flourishing at Tiruvarur under the name "Ullur Mudali', was a great admirer of Dikshitar ; but Dikshitar did not care to extol him. He has sung of the God and Goddess at his small village, Visvesvara and Annapurni. He presented Dikshitar with lavish riches and requested to sing of him. Dikshitar refused but consented to pray to God Visvesvara of his village to shower his blessings on him and his house; and Dikshitar sang for him his Raga Malika in fourteen Ragas on Sri Visvasnatha, at the end of which he prays for the welfare of this patron. While at Tiruvarur, Dikshitar was very often suffering from poverty. There was an occasion when unable to bear his condition, a very devoted lady pupil of his named Kamalam, a courtezan of Tiruvarur, who served Dikshitar as a servant, wanted to pledge her jewels and get money for helping her teacher. Dikshitar

came to know of her intention, called and told her that she had not jewels enough to relieve him for all time and that no mortal being could help him. He at once sang upon God Tyagaraja 'Tyagarajam bhaja re' in Yadukula Kamboji. The next morning, when Kamalam came to pay her respects to and serve her master, she saw the miracle wrought by 'Tyagarajam bhaja re.' The local choultry department manager had gathered a lot of provisions expecting the arrival of some state officer from the Tanjore Court; the officer had postponed his visit and the only fitting way in which the Satram manager could dispose off his provisions was to send them wholesale to the houseof the poor, pious musician. A third miraculous incident is related in his life. He was once at Kivalur near Tiruvarur to see the deity at the temple in that place. When he went there, the Archaka who performed the daily evening Puja had finished it very early and the door of the sanctuary was closed upon Dikshitar's face. Dikshitar requested him to let him have the 'darsana' of the God and the pleasure of propitiating him with a song. Curtly replying him that the God could wait for a day to hear Dikshitar's music, the Archaka walked out. Sorrow stricken, the devoted musician touched the tune called the 'ornament of God Siva'-'Sankarabharana'-and sang 'Akshaya linga vibho' and as if in keeping with the time-measure of the song, there broke a sound; the Archaka turned back in wonder and Dikshitar also opened his eyes and lo! the locked gates had burst open to his Sankarabharana. Many more interesting incidents of a similar nature are related regarding his life, his piety, and his music.

Dikshitar is said to have been sweet in temper and always pleasant. He was known as a man of piety and devotion so much that wherever he went he was requested to give religious talks also, besides music.

Many were the courtezans like Kamalam and others, Nattuvanars and Nagasvarakaras of Tiruvarur who were his pupil. Many of his songs, especially those sung on the local deities Tyagaraja and others, can be recovered completely, if the traditional Nagasvaram music of the

Tiruvarur Temple, still going on, is examined. Among these pupils the greatest is a player on the Suddhamaddala at the temple named Tambiyappan, who, in his old age, is once set to have met and disagreed with the style of the singing of the late Maha Vaidyanatha Ayyar of the Dikshita Kirtana 'Cintaya makanda etc.' Another pupil of Dikshitar was Tirukkadayur Bharati. While staying at Tiruvarur, Dikshitar used to visit Tanjore often. It is said that he met Tyagayya also at Trivadi and that some discussion passed between them. Syma Sastry was a great friend of Dikshitar. The three celebrated Nattuva brothers of Tanjore, Ponnayya, Vadivelu and Sivanandam, the second of whom went and distinguished himself at the Trivandrum Court, were all the pupils of Dikshitar. After the death of Dikshitar, Ponnayya sang a Telugu Kriti on Dikshitar, in Raga Bhinna shadja 'Sri guru guha murtikine sisyudayiunnanura etc.'

The last six or seven years of Dikshitar's life were spent happily under the warm patronage of the Raja of Ettayapuram. Dikshitar had no son ; but he adopted the son of his brother's daughter, named Subbarama Dikshitar. Subbarama Dikshitar, himself a composer of great talent and a worthy descendent of Muthuswamy Dikshitar, published from Ettayapuram the music work 'Sangita Sampradaya Pradarsini, which contains most of the compositions of Muthuswamy Dikshitar.' His son Muthuswamy Dikshitar is still in our midst.

All the compositions of the Dikshitar are in Sanskrit, except a few. There is a 'Manipravala' piece in Sanskrit and Tamil on God Venkatesa in the shrine of Pulivalam near Tiruvarur and a few compositions in Telugu, including some Varnas and Darus. In old days Dikshirar's compositions were very popular with all the great musicians. Around Mysore and in other places also his pieces are being sung. He has composed more than five hundred Kirtanas; but in the music world of to-day, it will be a wonder if one finds more than thirty of them being handled. Efforts are now being made by the Sishyas of Dikshitar

among the Nagasvarakaras near Tiruvarur to bring out a Tamil Edition of Dikshitar's Kirtanas.

Dikshitar was a Vainika and also a good vocalist. He had a bass voice and healthy body; the former gave a solemn sonorousness to his music and with the latter he could easily handle his long-drawn, deep and swaying music. The speciality of his compositions are that they are all in Vilambakala, in 'Chowka', slow and majestic in their movement. They are rich in Gamaka and show great musical scholarship. Each major Kirtana can be considered a treatise on the Raga and very rarely does repetition of musical phrase occur. Though devoid of 'Sangatis', which was absent in his days, his compositions have large scope for them. While others confined themselves to the Adi, Rupaka, Chapu and Jhampa Talas, Dikshitar employed greater variety of Tala by utilising Ata, Mathya, and Dhruva Talas as also the Tisra, Caturasra and Khanda Jatis of Eka Tala. His compositions can generally be said to have kept those of Kshetragna for their model. They need great sustaining power and musical scholarship and skill on the part of the artist and hence it is that in an age which delights in quick, flashing, easy and running music, his songs are not so much in vogue. The slow stately movement of his Kirtanas call up before the mind the image of the huge and majestic car of Tyagaraja at Tiruvarur, the glory of which is sung in the well-known old saying—Tiruvarur Ter Azhahu.

Muthuswami Dikshitar's end came suddenly. At Ettayapuram, he was one day sitting, listening to the music of the pupils who were singing his Gamaka kriya Kirtana, 'Minakshi'. He asked them to sing it once more; they were singing the Anupallavi—Mina lochani Pasamochani'. when he felt that the Goddess had really released him from bondage (Pasa); he was accordingly released from mortal bondage.

Dikshitar lived up to his sixtieth year: he passed away in A.D. 1835 on the day of the Deepavali. With this years' Deepavali which we celebrate now, a full

hundred years have passed since Dikshitar last lived. A grand centenary celebration in Madras and all over the land where karnatic music reigns, and at Tiruvarur especially, and a memorial edition of his Kirtanas to bring them into greater vogue will form a fitting tribute to his memory.

P. P. & P. House, Ltd., Madras.